# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. STC - 594/2023**

**Deposition of Witness for Prosecution : D.W.1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **மணிகண்டன்** | Caste | : |
| Father/Husband Name | : **சுப்பிரமணியன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 16.04.2025**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனக்கு ஒட்டன்சத்திரத்தில் South Indian Bank–ல் வங்கி கணக்கு உள்ளது. அ.சா.ஆ. 1 காசோலை என்னுடையதுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. நான் கனரக வாகன ஓட்டுநர் உரிமம் வைத்துள்ளேன். நான் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் கனரக வாகன ஓட்டுநர் உரிமம் வைத்துள்ளதால், நான் ஓட்டுநராக வேலை செய்வதற்குதான் அதை எடுத்துள்ளேன் என்றாலும் சொந்த உபயோகத்திற்கு எடுத்திருந்தால் கனரக வாகன ஓட்டுநர் உரிமம் எடுத்திருக்க மாட்டேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ. 1 காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் அல்ல என்று எனது வழக்கறிஞர் பதில் அறிவிப்பிலும் எனது முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வழக்கிற்காக கையெழுத்து என்னுடையது இல்லை என்று பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எ.சா.ஆ. 1 திரு. ரமேஷ்பாபு என்ற வழக்கறிஞர் அறிவிப்பை பற்றி எனது அ.சா.ஆ. 4 வது பதில் அறிவிப்பில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எ.சா.ஆ. 3 வங்கி கணக்கு அறிக்கையில் எனது அலைப்பேசியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் என்றால் சரிதான். அதில் வங்கியின் முத்திரை இல்லை என்றால் சரிதான். மேற்படி எ.சா.ஆ. 3 நான் வங்கியில் சென்று கேட்டிருந்தால் முத்திரையுடன் கொடுத்திருப்பார்கள் என்றாலும், மேற்படி ஆவணம் நான் எனது அலைப்பேசியில் பதிவிறக்கம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. கோழிகூடு மாவட்டத்தில் புதுப்பாடி பஞ்சாயத்தில் மத்திய அரசு ஜல்ஜீவன் திட்டத்தில் தொழிலாளியாக வேலை செய்தேன். அந்த திட்டம் எவ்வளவு மதிப்பீடு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி திட்டத்தில் பலக்கோடி செலவில் எடுத்து நடத்தமுடியும் என்றாலும் சாதாரண நபர்கள் ஒப்பந்தம் எடுத்து நடத்தமுடியாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனவே நான் வேலை செய்த நிருவனம் மிகப்பெரிய நிருவனம் என்றாலும், அவர்கள் எ.சா.ஆ. 4 உறுதி கடிதத்தை லெட்டர் பேடில்தான் கொடுப்பார்கள் என்றாலும், மேற்படி ஆவணம் நான் வேலை பார்த்ததாக சொல்லப்படும் HDPE நிருவனத்தால் வழங்கப்பட்டது அல்ல என்றாலும் மோசடியாக கலர் ஜெராக்ஸ் எடுத்து வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி எ.சா.ஆ. 4 ஆவணத்தில் கையெழுத்து போட்ட நிருவனத்தின் உரிமையாளர் இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பாரா என்றால் அளிக்கமாட்டார். வழக்கிலிருந்த தப்பிப்பதற்காக மோசடியாக மேற்படி ஆவணத்தை நான் தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரரிடம் பணம் வாங்கி கொண்டு அவரை ஏமாற்றவேண்டும் என்று

நோக்கத்தில் செயல்பட்டுள்ளளேன் என்றால் சரியல்ல.  வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.